விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 206 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 28 வெள்ளிக்கிழமை (12.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சகல கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாது
# தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை
## சபையில் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



(கொழும்பு)

போராட்டங்களில் ஈடுபடும் தொழிற்சங்கங்கள் முன் வைக்கும் சகல கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாது. மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் வகையில் அரசியல் நிலைப்பாட்டுடன் போராட்டங்களில் ஈடுபடும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எதிராக அமைச்சு மட்டத்தில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான பிரசன்ன ரண துங்க சபையில் வலியுறுத்தினார். (02ஆம் பக்கம் பார்க்க)

## வேகக் கட்டுப்பாடு விதிமுறைகள்
### வர்த்தமானி வெளியிடத் தீர்மானம்

(கொழும்பு)

வீதி விபத்துக்களை குறைப்பதற்கு வேகக் கட்டுப்பாடு தொடர்பில் தேவையான விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானியை எதிர்வரும் இரண்டு வாரங்களுக் 15

## 252 இந்திய மீனவர்கள்
### நடப்பு வருடம் கைது

(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில், இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக்காக 252 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 15

### பருத்தித்துறை நகர சபையின்
## முன்னாள் நகர பிதா வீதி விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் நகரபிதா விபத்தில் சிக்கி படுகாயமடைந்து, வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக் 15

### கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி
## 7ஆம் நாளில் மூன்று மனித எச்சங்கள் த.வி.பு.ஓ 3035 தகட்டிலக்கம் மீட்பு

(முல்லைத்தீவு)



முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் 7ஆவது நாளான நேற்று மூன்று மனித எச்சங்கள் முழுமையாக வெளியே அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் த.வி.பு.ஓ - 3035 தகட்டிலக்கமும் மீட்கப்பட்டுள்ளது. 15

## ஜனாதிபதியையும் அரசையும் மக்கள் ஓட ஓட விரட்டியடிப்பர்
### பாராளுமன்றில் சுமந்திரன் எம்.பி எச்சரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் நடத்தியாக வேண்டும். அதுதான் அரசமைப்பு ஏற்பாடு. ஏதேனும் வகையில் அதைக் குழப்பித் தேர்தலைப் பிற்போட முயற்சித்தால் ஜனாதிபதியையும் இந்த அரசாங்கத்தையும் மக்கள் ஓட ஓட 02

## முறிகண்டியில் ஹயஸ் பாரவூர்தியுடன் மோதி விபத்து
### ஒருவர் பலி; மூவர் படுகாயம்

(கண்டாவளை)



முல்லைத்தீவு ஏ9 வீதியில் திருமுறிகண்டிக்கும் கொக்காவில் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்து 15

### ரயில் ஊழியர்களின்
## புறக்கணிப்பு முடிவடைந்தது

(கொழும்பு)

தொடருந்து நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் முன்னெடுத்த பணிப் புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை 15

### மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்தில்
## புலிகளால் புதைக்கப்பட்டிருந்த பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)



விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டிருந்த ஆளணி எதிர்ப்பு கண்ணிவெடிகள் மற்றும் தோட்டாக்கள் என்பன கண்டு பிடிக்கப்பட் 15

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு
### பிரதமர் தினேஸ் குணவர்த்தன இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)



பிரதமரும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தன யாழ், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு இன்று 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட தீர்மானம்

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் நிறைவேற்று தர அதிகாரிகள் தமது வேலை நிறுத்தத்தை கைவிட தீர்மானித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்கவுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# சீனாவுடனான உறவை ஆழப்படுத்த இலங்கை முயற்சிக்க வேண்டும்

## இலங்கைக்கான சீனத் தூதுவர்

(கொழும்பு)

அபிவிருத்தி மற்றும் சவாலான காலங்களில் சீனாவின் நிலையான ஆதரவைக் கருத்திற் கொண்டு, சீனாவுடனான தங்களது உறவுகளை மேலும் ஆழப்படுத்த இலங்கை முயற்சிக்க வேண்டும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென்ஹொங் தெரிவித்துள்ளார்.

சீனாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் இலங்கை பயனடைய முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை - சீன வர்த்தக சபையின் 23ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் எந்தத் தயக்கமும் இருக்கக் கூடாது எனவும் இலங்கைக்கான சீனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த வருமானம் கொண்ட நாடான கம்போடியா 2020ஆம் ஆண்டு சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் ஊடாகப் பாரியளவான நன்மைகளை அடைந்துள்ளதாகவும் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென்ஹொங் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# தொழிற்சங்க..

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றிய தாவது,

அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளுக்கு அமைய ஒரு சில தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். புகையிரத தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினால் கம்பஹா - பென்முல்ல பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் புகையிரதத்தில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாது. பொது மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் வகையில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடும் தொழிற்சங்க தலைவர்களுக்கு எதிராக அமைச்சு மட்டத்தில் உரிய நடவடிக்கைகளை எடுங்கள். இவர்களின் அரசியல் நிலைப்பாடுகளுக்காக அப்பாவி மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்க முடியாது என்றார். (ம-7)

# ஜனாதிபதி...

விரட்டியடிப்பார்கள்.

இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் அரசதரப்பைப் பார்த்து எச்சரிக்கை விடுத்தார் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

ஜனாதிபதித் தேர்தல் விடயம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் நேற்று பாராளுமன்றத்தில் கொண்டு வந்த ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையின் மீது உரையாற்றும் போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள்தான் என்பது அரசமைப்பிலும் தெளிவாக உள்ளது. அதை இப்போது உயர் நீதிமன்றமும் தெளிவுபடுத்தி விட்டது. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பான அரசமைப்புப் பிரிவுகளில் மாற்றம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டிய தேவை எதுவும் இல்லை.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு வருடங்களுக்கு மேல் நீடிப்பதாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற அரசமைப்பின் 83 (ஆ) பிரிவு இவ்விடயங்களில் சம்பந்தப்பட்டது அல்ல. அதை மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் இல்லை. அதை மாற்றி அமைப்பதாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவை என்ற கருத்து இருந்ததாலேயே 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டபோது அதை மாற்றாமல் அப்படியே விடுகின்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் இணக்கத்தோடுதான் அப்படியே அதை விட்டுவிட முடிவு எடுக்கப்பட்டது. அதனால் சர்ச்சைகளோ குழப்பங்களோ ஏதுமில்லை. ஏற்கனவே ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள்தான் என்பது திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட்ட விடயம். இந்த 83 (ஆ)பிரிவு அரசமைப்பில் இருப்பதால் எந்தக் குழப்பமும் புதிதாக வந்துவிடாது.

ஆனால், இந்தப் பிரிவுக்கு திருத்தம் கொண்டு வருகின்றோம் என்று குழப்பத்தை ஏற்படுத்த ஜனாதிபதியின் தரப்பு முயலுகின்றனர் என்று தோன்றுகின்றது. அந்தப் பிரிவைத் திருத்த சர்வஜன வாக்கெடுப்பு என்ற நிலைப்பாடு வருமானால், அதைக் காட்டி தம்முடைய பதவிக்காலம் 5 வருடங்கள்தானா என்பதை ஒட்டிய சர்ச்சையைக் கிளப்பலாம் என்று ஜனாதிபதி எண்ணுகின்றார் போலும். எது, எப்படி என்றாலும், நாடு வரும் ஒக்டோபர் 17 இற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. அது சட்ட ரீதியான கட்டாயம். அதில் கை வைக்க அலலது தேர்தலைத் தள்ளிப்போட முயற்சி எடுக்கப்பட்டால் அரசையும் ஜனாதிபதியையும் மக்கள் வீதி வீதியாக துரத்தி அடிப்பார்கள். ஓட ஓட விரட்டுவார்கள். அதனை முன் எச்சரிக்கையாகக் கூறிவைக்க விரும்புகின்றேன் என் றார் சுமந்திரன் எம்.பி. (ம-7)

# துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் நாட்டில் அதிகரித்துள்ளது - சஜித்

நாட்டில் இன்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.


நேற்று பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியிருந்தார். அதிகரித்துள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் காரணமாக இன்று நாட்டு மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இன்று நாட்டில் மோதல்கள் அதிகரித்துள்ளன. நாட்டில் சட்டம் ஒழுங்கு முறையாக பேணப்படுகின்றதா என்ற சந்தேகம் மக்களுக்கு எழுந்துள்ளது.

நாட்டு மக்கள் இன்று அச்சத்துடனேயே வாழ்கின்றனர். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைச் சம்பவங்கள் நாட்டில் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்னவென்று நான் கேள்வி எழுப்புகின்றேன். நாட்டின் சட்ட ஒழுங்கை பேணி, பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றார். (ம-7)

# மரண அறிவித்தல்

## திருமதி கெங்காதேவி தில்லைசிவலோகநாதன்



தோற்றம் : 04.12.1946 | மறைவு : 07.07.2024

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதேவி தில்லைசிவலோகநாதன் கடந்த 07.07.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் தில்லைசிவலோகநாதன் (முன்னாள் SSO இ.போ.ச - கோண்டாவில் சாலை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் (பொறியியலாளர்) - நாகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (பதிவாளர்) - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் இந்திரா (கொ/சேர் ராஸீக் பரீட் முஸ்லிம் மகளிர் கல்லூரி), சந்திரா (யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), தெய்வரதி (யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), சிவரதி (முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ்.மருத்துவபீடம், கால்நடை வைத்தியர் - கனடா), ரஜினி(ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மணிவண்ணன் (கொழும்பு), இளங்கோ (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), பாலரஞ்சன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் -விவசாய அமைச்சு வட மாகாணம்), Dr.அருணா (முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் - கால்நடை மருத்துவபீடம் பேராதனை பல்கலைக்கழகம், கால்நடை வைத்தியர் - கனடா), சஞ்சீவன் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான சிவசுந்தரம் (முன்னாள் யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர்), கமலாதேவி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலவாணர், கலாபரமேஸ்வரன் மற்றும் நாராயணமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் அட்சாஜினி, அம்சாஜினி, அக்ஷிலா, அபிருத், அனுஸ்கா, பானுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (14.07.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்துசிட்டி பொது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சுன்னாகம் வீதி,
புத்தூர் மேற்கு, புத்தூர். குடும்பத்தினர் (1457)


காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு வைரவர் கோவிலுக்கு பக்கத்து வீதியில் 1 பரப்புக் காணி(சதுரம்) மலசலகூடம், குழாய்க் கிணறு (நல்ல தண்ணீர்) உடன் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (1444)

077 574 3271



சைவத்தின் மீது பழிச்சொல் போக்குவது எவ்வாறு? கலந்தாலோசிக்க வருக...

யாழ் மாவட்டத்திலுள்ள இந்து அமைப்புகளை அழைக்கின்றோம்.

காலம் : ஆனி 30 ஞாயிறு (14.07.2024) மாலை 3 மணி

இடம் : அறிவாலயம், அருள்மிகு கந்தசாமி கோயில் திருவீதி, இணுவில்.

தொடர்பு :
இந்து அமைப்புகள் ஒன்றியம்
சிவதொண்டர் பு.சிறீந்திரன்
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
+94 779603001 (C-0778)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்புறக்கணிப்பில் கலந்து கொள்ளாத அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

**(கொழும்பு)**

**கடந்த 8 ஆம் திகதி மற்றும் 9 ஆம் திகதிகளில் கடமைகளில் ஈடுபட்டிருந்த அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.**

தொழிற்சங்க பிரதிநிதிகள் குழு வொன்று இவ்வாறு முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளது.

ஒன்றிணைந்த பணிப்புறக்கணிப்பில் கலந்து கொள்ளாத பணியாளர்களுக்கு விசேட சம்பள அதிகரிப்பை வழங்கி அரச உத்தியோகத்தர்களுக்கு இடை யில் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிக் கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

அரச சேவையின் நிறைவேற்று அதிகாரிகளுக்கு வழங்க தீர்மானிக்கப் பட்டுள்ள 25,000 ரூபாய் கொடுப்ப னவை தமக்கு வழங்குமாறு கோரி அரச ஊழியர்கள் கடந்த இரண்டு நாட்களாக பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி மற்றும் 9ஆம் திகதிகளில் வேலை நிறுத்தத்தில் பங்கேற்காத அரச ஊழியர்களுக்கு விசேட சம்பள அதிகரிப்பை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

இதேவேளை, சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு எதிர் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரச சேவை யின் அனைத்து தொழிற்சங்கங்களுடன் இணைந்து விசேட கலந்துரையாடலும் இடம்பெற்றது. (நி-6)

# இலங்கையைப் பாராட்டிய நியூசிலாந்து சபாநாயகர்



(கொழும்பு)


நியூசிலாந்து பாராளுமன்றத்தின் சபாநாயகர் கெர்ரி போன்லீ நேற்று முன்தினம் பிரதமர் தினேஷ் குண வர்தனவைச் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

குறித்த சந்திப்பானது அலரிமாளி கையில் இடம்பெற்றிருந்தது. இதன் போது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவைக் குறிப்பிட்ட பிரதமர், நியூசிலாந்துக்கும் இலங் கைக்கும் இடையிலான இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை அதிக ரிக்கவும் கொழும்பு திட்டத்தின் கீழ் ஆதரவை அதிகரிக்கவும் அழைப்பு விடுத்தார். அத்துடன் 1958 ஆம் ஆண்டு கொழும்புத் திட்ட மானியத்தின் கீழ் மஹரகமவில் இலங்கை பல் மருத்துவக் கல்லூரியை நிறுவியமைக்காக நியூ சிலாந்துக்கு நன்றி தெரிவித்த பிரதமர், அதனை மேலும் மேம்படுத்துவதற்கு உதவி கோரினார்.

இதேவேளை இலங்கையின் விரை வான பொருளாதார மீட்சியைப் பாராட்டிய நியூசிலாந்தின் சபாநாயகர், இலங் கைக்கு தொடர்ச்சியான ஆதரவினை யும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக உறுதி செய்தார். (நி-6)

# நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையலாம்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

“சரியான பொருளாதார முறை மூலம் நாட்டை முன்நோக்கி கொண்டு செல்லாவிட்டால் நாட்டிற்கு கிடைத்த வெற்றிகளை மீண்டும் இழக்க நேரிட லாம்” என ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலி - கரந்தெனிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கறுவா அபிவி ருத்தி திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இதன்போது இறக்குமதி பொருளா தாரத்தில் தங்கியிருந்தமையே நாடு வங்குரோத்தடைவதற்கு முக்கிய கார ணமாகும் எனச் சுட்டிக்காட்டிய ஜனா திபதி, இறக்குமதிக்காக பாரியளவில் கடன்கள் பெறப்பட்டதாகவும் தெரிவித் துள்ளார்.

அத்துடன் சரியான பொருளாதாரக் கொள்கைகளால், நாடு தற்போது வங்கு ரோத்து நிலையில் இருந்து விடுபட முடிந்துள்ளதாகவும் ஏற்றுமதி பொருளா தாரத்தை நோக்கி நாடு பயணிக்காத பட் சத்தில் இன்னும் 15 வருடங்களில் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச் சியடையும் நிலை ஏற்படும்.

எனவே நாடு விரைவில் ஒரு புதிய பொருளாதாரக் கட்டமைப்பிற்கு செல்ல வேண்டும் எனவும் அங்கு ஏற்றுமதி பொருளாதாரம் மூலம் அந்நிய செலா வணியை ஈட்ட வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# நுவரெலியாவில் பேருந்து விபத்து 42 பேர் வைத்தியசாலையில்

(ஹற்றன்)


நுவரெலியாவில் இருந்து திருகோ ணமலை நோக்கி சென்ற அதிசொகுசு தனியார் பயணிகள் போக்குவரத்து பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகி யுள்ளது

இந்த விபத்தில் 42 இற்கு மேற் பட்டோர் காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் நேற்று அதி காலை நுவரெலியா கண்டி வீதியில் லபுக்கலை பகுதியில் இடம்பெற்றுள் ளது.

இந்த விபத்து காரணமாக நுவரெலியா கண்டி பிரதான வீதியில் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட் டுள்ளது.

நுவரெலியாவிலிருந்து சுற்றுலா சென்ற அதிசொகுசு தனியார் பேருந்து பாதையை விட்டு விலகி அருகில் இருந்த பாதுகாப்பு இரும்பு வேலியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.



குறித்த விபத்தின் போது பேருந் தில் பயணம் செய்த சாரதி மற்றும் நடத்துனர் உட்பட 42 பேர் காய மடைந் துள்ளனர்.

இதனையடுத்து விபத்து தொடர் பான மேலதிக விசாரணைகளை நுவரெ லியா பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய குத்துச் சண்டை போட்டி முல்லைத்தீவுக்கு இரண்டு பதக்கங்கள்





தேசிய மட்ட குத்துச் சண்டை போட்டியில் முல்லைத்தீவு வீராங்கனைகள் இருவர் வெள்ளி பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படும் 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட ஆண்கள், பெண்களுக்கான குத்துச் சண்டை போட்டி கொழும்பு ரொறிங்ரன் உள்ளக அரங்கில் கடந்த 3.7 ஆம் திகதி வரை வரை நடைபெற்றது

இப் போட்டியில் வடமாகாண குத்துச்சண்டை வீராங்கனைகளாக கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனைகளான மு.இந்துகாதேவி 48 கிலோ எடைப்பிரிவில் 50 கிலோ எடையினை தூக்கி 2 ஆம் இடத்தைம் எஸ்.யஷ்மிதா 57 கிலோ எடை பிரிவில் 60 கிலோ எடையினை தூக்கி 2 ஆம் இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-350)

## கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி மாகாண போட்டிக்கு தெரிவு





கிளிநொச்சி வடக்கு வலய பெரு விளையாட்டுப் போட்டிகளில் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் மூன்று அணிகள் மாகாணப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

18 வயது ஆண்கள் உதைபந்து போட்டியில் 1ஆம் இடமும் 18 வயது ஆண்கள் துடுப்பாட்டப் போட்டியில் - 2 ஆம் இடமும் 16 வயது ஆண்கள் உதைபந்து போட்டியில் - 2ஆம் இடம் ஆகிய இடங்களைப் பெற்று மாகாணப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளது. (நி-6-350)

## தேசிய கால்பந்து அணியில் பத்திரிசியார் கல்லூரி மாணவன்



புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் 15 வயதுக்குட்பட்ட தேசிய கால்பந்து அணியில் இடம் பிடித்துள்ளார்.

புனித பத்திரிசியார் கல்லூரி மாணவனான அல்காந்தரா விக்மிலன் தேசிய 15 வயதுக் குட்பட்ட அணிக்கு இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## கே.சீ.சீ.சீ அணி ஆதீக்கம்



யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 15 ஆவது ஆண்டாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் கே.சீ.சீ.சீ அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 27.71 புள்ளிகளைப் பெற்று முன்னிலையிலுமுள்ளனர்.

இரண்டாவதாக கிறாஸ்கொப்பர்ஸ் அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்றும் 20.68 புள்ளிகளை பெற்றுள்ளனர். 2 போட்டிகளில் வெற்றி பெற்று 17.02 புள்ளிகளை பெற்று 3 ஆவது இடத்திலும் யாழ்.ஜொனிஸ்ரார் அணி 3 போட்டிகளில் பங்குபற்றி 1 போட்டியில் வெற்றி பெற்று 11.07 புள்ளிகளை பெற்றும் 4 ஆவது இடத்திலும் யூனியன்ஸ் அணி 2 போட்டிகளில் பங்குபற்றி இரண்டிலும் தோல்வியடைந்து 5.34 புள்ளிகளைப் பெற்று 5 ஆம் இடத்திலும் யாழ்.பல்கலைக்கழக அணி 2 போட்டிகளில் பங்குபற்றி இரண்டிலும் தோல்வியடைந்து 5.23 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்திலுமுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 600 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் அழிப்பு

(கொழும்பு)

600 கோடி ரூபாயிற்கும் அதிகமான பெறுமதியான கொக்கெய்ன் போதைப் பொருளை கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே முன்னிலையில் வனாதவில்லுவ லாக்டோ தோட்டத்தில் வைத்து நேற்று அழிக்கப்பட்டுள்ளன.

அதன்படி 2020 ஆம் ஆண்டு இந்த போதைப் பொருள் கையிருப்பு கைப் பற்றப்பட்டதுடன், அதில் 355 கிலோ 881 கிராம் கொக்கெய்ன் போதைப் பொருள் இருந்ததுடன், அது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்ததையடுத்து, கொழும்பில் இருந்து வனத்தவில்லுவ லாக்டோ பிரதேசத்திற்கு விசேட பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புடன் எடுத்து செல்லப்பட்டிருந்தது.

இந்நிலையில் அங்கு உயர் மின் உலையில் 19 பில்லியன் ரூபாய் பெறுமதியான ஹெரோயின், ஐஸ், கொக்கெய்ன் உள்ளிட்ட 1890 கிலோ பெறுமதியான போதைப்பொருள் அழிக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் பொது பாதுகாப்பு அமைச்சர் திரன் அலஸ், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ரி-6)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 14.06.2024 வெள்ளிக்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர். சறோஜினிதேவி குலசேகரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 13.07.2024 சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனிதத்தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்திய கிரியைகள் 14.07.2024 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளது.

அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெயவத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், கிரியைகளை நடத்திய குருமார்கள், பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள், சமூக வலைத்தளங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோர், தொலைபேசி மூலம் துயரினைப் பகிர்ந்து கொண்டோர் மேலும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவர்க்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அல்லையம்பதி,
துன்னாலை கரவெட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(C-774)


# இராசிபலன்

12.07.2024
ஆனி 28 , வெள்ளிக்கிழமை
சஷ்டி நண்பகல் 11.59 மணிவரை

உத்தரம் பிற்பகல் 4.10 மணிவரை
சுபநேரம் -5.59-7.29 மணிவரை
இராகுகாலம் -10.29-11.59 மணிவரை

ஆனி உத்தர தரிசனம், சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்.
உத்தராடம், திருவோணம்.

வளவன்

**மேஷம்**
வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**ரிஷபம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கனவுகள் நனவாக இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்**
நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்**
வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்**
புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், நாவன்மையால நல்ல பெயர் கிடைக்கும், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி**
புதிய அனுபவங்கள் ஏற்படலாம், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்**
தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**தனுசு**
குடும்ப ஒற்றுமை கூடும், உதிரி வருமானங்கள வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்**
உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள்.

**கும்பம்**
உடல் நலனில் கவனம் தேவை, குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், முயற்சிகளில் சிறு தடை தாமங்கள் ஏற்படலாம்.

**மீனம்**
நட்பு வட்டம் விரிவடையும் நாள், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், காரிய அனுகூலமுண்டு.

செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான், தெரியாதவன் போதிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 தமிழக மீனவர்கள்
## காரைநகர் கடற்பரப்பில் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 13 தமிழக கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.காரைநகர் கடற்பரப்பில் மூன்று படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 13 தமிழக கடற்றொழிலாளர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களையும் அவர்களின் படகுகளையும் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்திற்கு கொண்டு சென்ற கடற்படையினர், கடற்றொழிலாளர்களை யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-6-33)



யாழ்.கலட்டி வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

## பனை அபிவிருத்தி வார கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பனை அபிவிருத்தி வாரக் கண்காட்சி நிகழ்வு எதிர்வரும் 22 தொடக்கம் 28 ஆம் திகதி வரை யாழ்.சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் மாகாணத்தில் உள்ள உயர் அதிகாரிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் வட மாகாணத்தில் உள்ள பனை, தென்னை வள நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் உள்ளன. 2023 ஆம் ஆண்டில் சங்கங்களின் வளர்ச்சிக்குச் சேவையாற்றி உற்பத்திகளை வழங்கிய சிறந்த உறுப்பினர்களும் இதன்போது கௌரவிக்கப்பட உள்ளனர்.

கண்காட்சி நிகழ்வு காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை இடம்பெறும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (நி-6)

## காக்கைதீவு மீன்சந்தையில்
# பழுதான கடல் உணவுகளை அழிக்க நீதிமன்று உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.காக்கைதீவு மீன் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த இறால்களை அழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காக்கைதீவு சந்தையில் பழுதடைந்த மீன் மற்றும் இறால்கள் விற்பனை செய்யப்படுவதாக ஆனைக்கோட்டை பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தைக்கு சென்று திடீர் சோதனை நடவடிக்கைளை முன்னெடுத்த வேளை விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த மீன்கள் மற்றும் இறால்கள் ஒரு தொகை மீட்கப்பட்டது. அவற்றை கடந்த செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிமன்றில் சான்றுப் பொருட்களாக பரப்படுத்தி வழக்குத் தாக்கல் செய்திருந்த நிலையில் பழுதடைந்த மீன்கள் மற்றும் இறால்களை அழிக்கு மாறும் உத்தரவிட்ட மன்று, வழக்கு விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (நி-6-33)

# வடமராட்சி கிழக்கில்
## சென்மேரிஸ் விளையாட்டரங்கு திறப்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கட்டைக் காடு சென்மேரிஸ் விளையாட்டுக்கழக விளையாட்டு அரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சென்மேரிஸ் விளையாட்டுக்கழகத் தலைவர் பி.றஜித் தலைமையில் மாலை 3:30 மணிக்கு ஆரம்பமான குறித்த நிகழ்வில் கட்டைக்காடு பங்குத் தந்தை அ. அமல்ராஜ், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்க உத்தியோகத்தர், கட்டைக்காடு அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர், சென் மேரிஸ் நாடகமன்ற தலைவர், சென் மேரிஸ் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மரியாம்பிள்ளை யாக்கோப் றஜீக்குமார் நினைவாக அவரது உறவினரால் 42 லட்சம் ரூபாய் பெறுமதியில் கட்டப்பட்ட சென் மேரிஸ் விளையாட்டரங்கு செல்வக்குமாரால் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது. (நி-6-60)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தினால் கோரப்படுகின்றன.

| இல | வலயக்கல்வி அலுவலகம் | பாடசாலை | பாடசாலை வகை |
|---|---|---|---|
| 01 | தென்மராட்சி | யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் | வகை-II |
| 02 | தென்மராட்சி | யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை | வகை-II |
| 03 | தென்மராட்சி | யா/கரம்பை அ.மி.த.க பாடசாலை | வகை-III |

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு-II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பொருத்தமான பாடசாலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 29.07.2024 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் "வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, ஹென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2024" எனக்குறிப்பிடவும்.

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

2.வகை-II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு -II ஐ உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

3.அதிபர் வகுப்பு-II ஐச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு-III ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படும்.

4. வகை-III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு III ஐ உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

5. மாகாணக்கல்வி அமைச்சின் "அதிபர் வெற்றிடம் நிரப்புதல்" சுற்றுநிருப இல 2023/03,2023/03A இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும்.

வலய நேர்முகத் தேர்வுச் சபையின் நேர்முகப்பீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு சேவை நிலையம் வழங்கப்படும். மேற்படி தெரிவு செய்தல் தொடர்பாக வட மாகாணக் கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும் என தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் இ.கமலராஜன் அறிவித்துள்ளார். (நி-6)

# காட்சிப்படுத்தப்பட்டுள்ள வாகன இலக்கத்தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத் தலைமை அலுவலகத்திலுருந்து 2024.07.03 ஆம் திகதி யாழ்.மாவட்டச் செயலக அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன் புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாளஅட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# கோண்டாவில் றோ.க.த.க
## பாடசாலையின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் ... பதிப்பிள்ளை நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்வலயக்கல்வி அலுவலக பொது நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கனகசபை சுவீதன் கலந்து கொள்ளவுள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாளில் மட்டும் புகைப்பிடித்தலினால் 50-60 மரணங்கள்

## போதைப் பொருள் தகவல் மையம்


**(கொழும்பு)**

**நாட்டில் புகைப்பிடித்தலினால் நாளொன்றுக்கு 50 முதல் 60 மரணங்கள் பதிவாகுவதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.**

அநுராதபுரத்தில் உள்ள சர்வோதய நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தினால் இந்த தரவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் நாளொன்றுக்கு 16 இலட்சம் பேர் புகைப்பிடிப்பதோடு அதற்காக நாளொன்றுக்கு 50 கோடி ரூபாயிற்கும் அதிகமாக செலவழிக்கின்றனர்.

புகைப்பழக்கம் காரணமாக அதிகளவான மக்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மக்கள் மத்தியில் புகைப்பழக்கம் 9 வீதமாக குறைவடைந்துள்ளதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-6)

# புகையிரத கட்டுப்பாட்டாளர்களுக்கு இராஜினாமா கடிதங்கள் தயார்

## பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள புகையிரத நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் உட்பட சுமார் ஆயிரம் ரயில்வே ஊழியர்களுக்கு இராஜினாமா கடிதங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு நேற்றுக் காலையும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும் கடந்த 9 ஆம் திகதி நள்ளிரவு முதல் புகையிரத நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# குழந்தை வளர்ப்பு விசேட வகுப்பு

(கொழும்பு)

குழந்தைகளைப் பராமரித்தல், தாய்ப்பாலூட்டுதல், குழந்தைகளை வளர்த்தல் போன்ற விடயங்களில் போதிய தெளிவு இல்லாத காரணத் தினால் புதுமணத் தம்பதிகளுக்குக் குழந்தை வளர்ப்பு குறித்து விசேட வகுப்புகளை நடத்துவதற்குச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் யுனிசெப் நிறு வனத்துடன் இணைந்து இந்த வேலைத்திட்டம் எதிர்வ ரும் டிசம்பர் மாதம் ஆரம்பிக் கப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிறப்பு முதல் 5 வயது வரையிலான காலப்பகு தியில் குழந்தைகளின் ஆரம்பக் குழந்தைப் பருவத்தை அபிவிருத்தி செய்வது மிகவும் அவசியமானது என குடும்ப சுகாதாரப் பணியகத்தின் சமூக விசேட வைத்திய நிபுணர் ஆசிரி ஹேவமலகே தெரிவித்துள்ளார். (நி-6)

# சிறுவர்கள் மத்தியில் அதிகரிக்கும் இன்ஃப்ளூவன்ஸா



(கொழும்பு)

இலங்கையில் இந்த நாட்களில் குழந்தைகள் மத்தியில் இன்ஃப்ளூவன்ஸா நோய் அறிகுறிகள் தென்படுவது அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இதற்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளை பெற வேண்டும் எனவும் வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்ஃப்ளூவன்ஸா (காய்ச்சல்) என்பது வைரஸ்களால் ஏற்படும் கடுமையான சுவாச தொற்று ஆகும். உலகின் அனைத்து பகுதிகளிலும் இது பொதுவானது.

உலக சுகாதார அமைப்பின் கருத்தின் படி, பெரும்பாலான மக்கள் சிகிச்சையின்றி குணமடைகிறார்கள்.

அத்துடன் இருமல் அல்லது தும்மலின் போது காய்ச்சல் எளிதில் பரவுகின்றதாகவும் காய்ச்சல், இருமல், தொண்டைப் புண், உடல் வலி மற்றும் சோர்வு ஆகியவை இன்ஃப்ளூவன்ஸாவின் அறிகுறிகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 [illegible]

# தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்திற்குக் கிடையாது

## வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்திற்குக் கிடையாது எனவும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி அல்லது 12 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் எனவும் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர் தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் ஆகியன குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிச்சயமாக நடைபெறும் என்பதை ஜனாதிபதி தொடர்ச்சியாக வலியுறுத்தியிருந்தார்.

இதன்பிரகாரம் முதலாவதாக ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். தேர்தல் செலவீனங்களுக்காக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி அல்லது 12 ஆம் திகதி ஜனாதிபதித்தேர்தல் இடம் பெறும்.

தேர்தலை பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது. கடந்த இரண்டு வருடங்களில் இந்த நாட்டை வீழ்ச்சிப்பாதையில் இருந்து மீட்டெடுக்க ஜனாதிபதி மேற்கொண்ட வேலைத்திட்டங்களை மக்கள் நன்கு அறிவார்கள்.

அரசாங்கம் என்ற ரீதியில் நாம் தேர்தலுக்கு தயாராகவே உள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் ஜனாதிபதியாக தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்பதே நாட்டு மக்களின் எதிர்ப்பார்ப்பாகும்" இவ்வாறு அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பட்மின்டன் விளையாடிய இந்திய குடியரசுத் தலைவர்



(டில்லி)

இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரபல பட்மின்டன் வீராங்கனையான சாய்னா நேவாலுடன் பட்மின்டன் விளையாடிய போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

ராஷ்டிரபதி பவனில் உள்ள பட்மிண்டன் மைதானத்திலேயே இருவரும் பட்மின்டன் விளையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான புகைப்படங்களை ஜனாதிபதி அலுவலகம் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள நிலையில் பலரும் குறித்த புகைப்படங்களுக்கு வரவேற்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## அசாமில் வெள்ளம்
## 159 விலங்குகள் உயிரிழப்பு



(டில்லி)

அசாமில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக காசிரங்கா தேசிய பூங்காவில் இதுவரை 159 வன விலகுங்கள் உயிரிழந்துள்ளதாக பூங்கா நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் கனமழை தொடர்ந்து பெய்து வருவதால் மணிப்பூர் மற்றும் அசாம் மாநிலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அபாயகரமான நிலை நீடித்து வருகிறது.

இந்நிலையில் காசிரங்கா தேசிய பூங்காவின் இயக்குநர் கோனாலி கோஷ் கூறுகையில், அசாமில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் இதுவரை 159 வன விலங்குகள் இறந்துள்ளன. வெள்ள நீரில் மூழ்கி 128 மான்கள், 9 காண்டாமிருகங்கள், 2 சதுப்புநில மான்கள் உள்ளிட்ட 159 வன விலங்குகள் இறந்துள்ளன.

அதேசமயம் 12 மான்கள், நீர் நாய் உள்ளிட்ட 133 விலங்குகளை மீட்டுள்ளோம். பூங்காவில் 111 விலங்குகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், மேலும் 7 விலங்குகள் தற்போது சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

காசிரங்கா பூங்காவில் மொத்தம் 233 வன முகாம்கள் உள்ளதாகவும், தற்போது வெள்ள நிலைமை ஓரளவு மேம்பட்டு வருகின்றது. ஆனால் பூங்காவில் உள்ள 62 வன முகாம்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும், அவற்றில் நான்கு முகாம்களை காலி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

## உச்சக்கட...

# பொது மக்களை வெ...
# இஸ்ரேல் இராணு...

(காசா)

**காசாவில் இருந்து பொதுமக்கள் பாதுகாக்கப்ப... வழியாகவே வெளியேறுமாறு இஸ்ரேல் ராணுவம் ... விடுத்துள்ளது.**



பாலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப்பினர் கட்டுப்பாட்டில் உள்ள காசாவில் கடந்த 7 மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் படையினர் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தப் போரில் 38 ஆயிரம் பேர் வரை பலியாகி விட்டனர்.

இந்த நிலையில் காசாவில் இறுதிக்கட்டப் போருக்கு, இஸ்... கடந்... தாக்கு... உள்ள...

இ... இருந்... காக்க... வெளி... ராணு... துள்ள...

## உக்ரைனுக்கு மேலும் ஆயுதங்களை வழங்குவோம்-ஜோபைடன் உறுதி

(வோஷிங்டன்)

உக்ரைனுக்கு மேலும், ஆயுதங்களை வழங்குவோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் தெரிவித்துள்ளார்.

நேட்டோ அமைப்பின் 75 ஆவது ஆண்டு விழாவையொட்டி, அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் நேட்டோ உச்சி மாநாடு ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் நேட்டோ உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளதுடன் சிறப்பு அழைப்பாளராக உக்ரைன் ஜனாதிபதி வெலாடிமிர் ஜெலன்ஸ்கியும் பங்கேற்றிருந்தார்.

இந்த மாநாட்டின் தொடக்க விழாவில் ஜனாதிபதி ஜோபைடன் உரையாற்றுகையில்,

எதிர்வரும் மாதங்களில் அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் உக்ரைனுக்கு அதிகளவான வான் பாதுகாப்பு அமைப்புகள் உட்பட ஏராளமான ஆயுதங்களை வழங்க முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும், உக்ரைனுக்கு முக்கியமான வான் பாதுகாப்பு இடைமறிப்புகளை ஏற்றுமதி செய்யும் போது, இந்தப் போரில் உக்ரைன் முன்னோக்கி செல்வது உறுதி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்தப் போரில் ரஷ்யா தோல்வியடைந்து வருவதாகவும், 2 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் விளாடிமிர் புடினின் இந்த விருப்பப்போரில், அவரது இழப்புகள் அதிர்ச்சி அளிப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் - ரஷ்ய போரில் 3 1/2 இலட்சத்துக்கும் மேற்பட்ட ரஷ்ய துருப்புக்கள் உயிரிழந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இந்த போரில் ரஷ்யா வெற்றி பெறாது எனவும், உக்ரைனே வெற்றி பெறும் எனவும் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி, உலக பாதுகாப்பின் அரணாக நேட்டோ உள்ளதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (நி-6)

## டுப... தய...



(டுபா... ஐக்கி... சுற்றுலா... நாடாக ... றது. நா... கணக்க... சுற்றி ப...

## இது போருக்கான நேரமல்ல!
## கூட்டறிக்கையில் வலியுறுத்திய மோடி

(வியன்னா)

பயங்கரவாதத்தினை எந்த வடிவிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இது போருக்கான நேரமல்ல என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

ரஷ்ய பயணத்தை முடித்துக் கொண்டு ஆஸ்திரியா சென்றடைந்த பிரதமர் மோடிக்கு ராணுவ மரியாதையுடன் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்நாட்டு இசைக்கலைஞர்கள் இந்திய தேசிய கீதத்தை இசைத்து பிரதமர் மோடியை வரவேற்றனர்.

அந்நாட்டு சான்சிலர் மாளிகைக்கு வந்த பிரதமர் மோடியை சான்சிலர் கார்ல் நெஹமர் வரவேற்றார். இரு நாட்டு தலைவர்களும் இருதரப்பு உறவு, வர்த்தகம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர். அதன்பின், இருவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...க்கட்ட போர்! ... வெளியேறுமாறு ...ணுவம் எச்சரிக்கை!

## ...க்கப்பட்ட பாதை ...ுவம் எச்சரிக்கை

இஸ்ரேல் தயாராகி வருகிறது. கடந்த 2 வாரமாக தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தி உள்ளது.


இதையடுத்து காசாவில் இருந்து பொதுமக்கள் பாதுகாக்கப்பட்ட பாதை வழியாகவே வெளியேறுமாறு இஸ்ரேல் ராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



போர் நடவடிக்கையை அதிகப்படுத்த இருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. காசாவில் தற்போது 3 லட்சத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் வசித்து வருகின்றனர்.

இஸ்ரேல் ராணுவத்தின் எச்சரிக்கையால் அவர்கள் பீதி அடைந்துள்ளனர். இஸ்ரேலின் இந்த நடவடிக்கை மிகவும் கவலை அளிப்பதாக ஐ.நா தெரிவித்து இருக்கிறது. (நி-6)

# நம்பினால் நம்புங்கள் பர்கர் 5000 யூரோ



(ஆம்ஸ்டர்டாம்)

உலகிலேயே மிகப் பெரிய பர்கரின் விலையானது உணவுப்பிரியர்களை வியப்படையச் செய்துள்ளது.

டச்சுப் பகுதியைச் சேர்ந்த டி டால்டன்ஸ் என்று பெயரிடப்பட்ட உணவகத்தின் உரிமையாளரான ராபர்ட் ஜான் டி வீன் என்பவர் ஒரு விலையுயர்ந்த பர்கரை உருவாக்கியுள்ளார்.

இதன் ஒரு பீஸ் சுமார் 5,000 யூரோக்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பர்கருக்கு "தி கோல்டன் பாய்" என்று பெயரிடப்பட்டுள்ளது. மேலும், இந்த பர்கர் தங்க இலைகள், குங்குமப்பூ, வாக்யு மாட்டிறைச்சி, கேவியர் மற்றும் பல சத்தான விலையுயர்ந்த உணவு பொருட்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக விலையுயர்ந்த உணவுப் பொருட்களின் சமையல் பட்டியலில் தனது பர்கரும் ஒரு இடத்தை பிடிக்க வேண்டும் என்பதற்காக இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளதாக உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இவர் தனது சமூக வலைத்தள பக்கங்களில், இந்த காணொளியை பகிர்ந்துள்ளார்.

மேலும், இந்த பர்கர் உருவாக்கத்தின் பின்னால் ஒரு நல்ல காரணம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, கொரோனா தொற்று காலத்தில் இந்த யோசனை தோன்றியதாகவும், இது ஒரு சாதனையை உருவாக்குவது மட்டுமல்லாமல் நெதர்லாந்தில் உள்ள வறுமையின் கவனத்தை ஈர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

கோல்டன் பாய் இன் முதல் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் வசதியற்ற குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த பர்கர் சமீபத்தில் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நம்பமுடியாத உயர் விலை, சுவைகள் மற்றும் பொருட்களின் சிறப்புக் கலவை காரணமாக அனைவரின் கண்களையும் கவர்ந்துள்ள இந்த பர்கர் விவாதப் பொருளாக மாறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# டுபாயில் பிரமாண்டமாக தயாராகும் கடற்கரை



(டுபாய்)

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் சுற்றுலாத்துறைக்கு பெயர் பெற்ற நாடாக டுபாய் பார்க்கப்படுகின்றது. நாள் தோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் டுபாயை சுற்றி பார்ப்பதற்காக மட்டும் வேறு நாடுகளிலிருந்து வருகிறார்கள்.

மேலும் மக்களை கவரும் வகையில் உலகின் மிக உயரமான கோபுரம், ஆடம்பரமான உணவகங்கள் மற்றும் தங்குவதற்கான ஹோட்டல்கள் என அட்டகாசமான இடங்களும் டுபாயில் இருக்கின்றன.

அந்த வகையில் சுற்றுலாத் தளங்களை மேலும் அதிகரிக்கும் வகையில் புதிய திட்டத்தை டுபாய் கையில் எடுத்துள்ளது. பொதுமக்களுக்காக 6.6 கிலோ மீற்றர் தூரம் கடற்கரையை உருவாக்க உள்ளது. அதில் நீச்சல் அடித்து கொண்டே டுபாயின் அழகை ரசிக்க 2 கி.மீ வரை நீச்சல் குளமும் வரவுள்ளது. பொழுது போக்கு அம்சங்களான தீம் பார்க்குகள் பல பொழுது போக்கு மண்டலங்கள் 330 ஹெக்டேயர் பரப்பளவில் உருவாக உள்ளன.

இதனால் டுபாய் மக்கள் மட்டுமின்றி மற்ற நாடுகளில் உள்ள சுற்றுலா பயணிகளும் மகிழ்ச்சியுடன் இந்த சுற்றுலாத் தளத்தை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருக்கின்றனர். (நி-6)

# இங்கிலாந்து பாராளுமன்றில் பகவத்கீதை

(லண்டன்)

இங்கிலாந்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியை வீழ்த்தி தொழிலாளர் கட்சி அபார வெற்றி பெற்றது.

தொழிலாளர் கட்சித் தலைவர் கெய்ர் ஸ்டார்மர் புதிய பிரதமராகப் பதவி ஏற்றார். இந்த தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 28 பேர் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

லீ செஸ்டர் கிழக்கு தொகுதியில் கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் போட்டியிட்ட இந்திய வம்சாவளிப் பெண்ணான ஷிவானிராஜா வெற்றிபெற்றார். இவரை எதிர்த்து போட்டியிட்ட தொழிலாளர் கட்சி வேட்பாளர் ராஜேஷ் அகர்வால் தோல்வி அடைந்தார்.

1987 ஆம் ஆண்டு முதல் லீ செஸ்டர் கிழக்கு தொகுதி தொழிலாளர் கட்சியின் கோட்டையாக இருந்து வந்தது. 37 ஆண்டுகளுக்கு பிறகு இதனை தகர்த்து ஷிவானி ராஜா முதல் முறையாக வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார். தொழில் அதிபரான இவர் குஜராத்தை சேர்ந்தவர் ஆவார்.

இங்கிலாந்து பாராளுமன் றத்தில் புதிய எம்.பிக்கள் பதவி ஏற்பு விழா நடைபெற்ற போது ஷிவானி ராஜா பகவத்கீதை மீது சத்தியம் செய்து பதவி ஏற்றுக் கொண்டுள்ளார். (நி-6)

கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது பிரதமர் மோடி பேசியதாவது.

எனது மூன்றாவது ஆட்சிக் காலத்தில் ஆஸ்திரியா வருவதற்கு வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

இது போருக்கான நேரமல்ல என நான் ஏற்கனவே கூறியுள்ளேன். பருவநிலை மாற்றம் மற்றும் பயங்கரவாதம் உள்ளிட்ட மனித குலம் சந்திக்கும் சவால்கள் குறித்து ஆலோசித்தோம்.

பருவநிலை மாற்றம் குறித்த விவகாரத்தில் சர்வதேச சோலார் ஒத்துழைப்பு கூட்டணியுடன் இணைந்து ஆஸ்திரியா பணியாற்ற வேண்டும் என அழைப்பு விடுக்கிறேன்.

பயங்கரவாதத்தை எந்த வடிவிலும் ஏற்கமுடியாது. அதற்கு கடும் கண்டனம் தெரிவிக்கிறேன் என குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய கார்ல் நெஹம்மர் உக்ரைன் மீது ரஷ்யா நடத்தும் தாக்குதல் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தினோம். இந்தியா ஒரு செல்வாக்கு பெற்ற நாடு. ரஷ்யா-உக்ரைன் இடையில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இந்தியாவின் பங்கு மிக முக்கியமானது என தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிந்தவை சட்டமா அதிபராக நியமிக்க அரசியலமைப்புப் பேரவை அங்கீகாரம்



(கொழும்பு)

ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்கவை சட்டமா அதிபராக நியமிக்க அரசியலமைப்பு பேரவை ஏகமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

சட்டமா அதிபராக செயற்பட்ட சஞ்ஜய் ராஜரத்தினத்தின் சேவைக்காலம் கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதியுடன் நிறைவடைந்தமையினால் கடந்த சில நாட்களாக சட்டமா அதிபர் பதவியில் வெற்றிடம் நிலவியது.

இதனை அடுத்து, ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க பதில் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்கவை சட்டமா அதிபராக நியமிக்க அரசியலமைப்பு பேரவை ஏகமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது. (நி-6)

## ஹிருணிகாவுக்கு பிணை இல்லை மனுவை பரிசீலிக்க தீர்மானம்



(கொழும்பு)

மூன்று வருட கடூழிய சிறைத்தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பிணை மனுவை பரிசீலிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

அதன்படி, இந்த பிணை மனு கோரிக்கையை வரும் பதினைந்தாம் திகதி விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

இந்த விண்ணப்பப்படிவத்திற்கு எதிராக சட்டமா அதிபர் எழுத்து மூல அறிக்கைகளை நேற்று தாக்கல் செய்துள்ளார்.

இளைஞன் ஒருவரை கடத்திச் சென்றது தொடர்பான நீண்ட விசாரணையின் பின்னர், கொழும்பு மேல் நீதிமன்றம் அவருக்கு மூன்று வருட கடூழிய தண்டனை விதித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவரது வழக்கறிஞர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தது. அதன்படி உயர் நீதிமன்றத்தில் இந்தஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250-300 |
| உருளைக்கிழங்கு | 300 | 250 | 270 |
| பச்சைமிளகாய் | 250 | 350 | 200 |
| தக்காளி | 350 | 300 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 170 | 150 | 120-140 |
| கோவா | 320 | 300 | 250 |
| கரட் | 500 | 480 | 350 |
| பூசணி | 200 | 200 | 150 |
| புடோல் | 250 | 200 | 200 |
| வாழைக்காய் | 140 | 200 | 160-200 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 250-400 |
| பெரிய வெங்காயம் | 260 | 250 | 220 |
| பாகற்காய் | 800 | 1000 | 800 |
| வெண்டக்காய் | 250 | 200 | 260 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 150 |
| பயற்றங்காய் | 350 | 300 | 300-350 |
| லீக்ஸ் | 500 | 500 | 350 |
| பீற்றூட் | 480 | 550 | 500 |
| கறிமிளகாய் | 800 | 700 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 600-800 |
| போஞ்சி | 700 | 600 | 350 |
| கத்தரிதம்புள்ள | 200 | 300 | -- |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 800 | 1000 | 600-700 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 70 | 60-120 |
| இராசவள்ளி | 500 | 450 | -- |
| வெங்காயப்பூ | 350 | 400 | -- |
| முள்ளங்கி | 180 | 150 | 150 |
| பொன்னாங்காணி | 90 | 120 | 100 |
| வல்லாரை | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 70 | 100 | 120 |

## இன்று ஒரு தகவல் 180



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# நெருப்புக்கோழி

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் வந்தார். அவர் ஒரு அறுவை மன்னர். அதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அது தான் எனக்கு வேண்டிய ஒருவர் என்று சொல்லிவிட்டேனே. இந்த உலகத்திலே இறக்கையில்லாமல் பறக்குறது எது? என்று ஒரு கேள்வி கேட்டார். எனக்கு தெரியவில்லை என்றேன். என்ன சார் இது கூடத் தெரியவில்லையா? அதுதான் மனிதன் என்றார். அதுவும் சரிதான் என்று தோன்றுகின்றது. இப்போது உள்ள மனிதன் எதற்கு எடுத்தாலும் பறந்து கொண்டே தான் இருக்கிறான். காலம் அப்படி ஆகிவிட்டது. என்று நினைப்பதற்குள்ளே அடுத்த கேள்வியைக் கேட்டார் அவர். அப்படி தான் ஆள் அகப்பட்டால் இலகுவில் விடமாட்டார்.

இந்த உலகத்திலே என்று ஆரம்பித்தார். சரி கேள்வியைச் சொல்லுங்கள் என்றேன். இறக்கையிருந்தும் பறக்க முடியாத பறவை எது என்றார். அதற்கு பதில் தெரியாது என்று சொல்லி விட்டால் உடனே அடுத்த கேள்வியைக் கேட்க ஆரம்பித்து விடுவார். அதனாலே கொஞ்சம் சிரமப்பட்டு யோசித்து தட்டுத்தடுமாறி ஒரு விடையைக் கண்டு பிடித்தேன். நெருப்புக்கோழி தான் சார் என்றேன். அதன்பின்பு அவர் அடுத்த கேள்விக்குப் போகவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக அதிலேயே துணைக்கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்.

நெருப்புக்கோழி நெருப்பை உண்ணுமா ? என்றார். சரி இன்றைக்கு அவரிடம் வசமாக மாட்டிவிட்டேம் என்று முடிவு செய்துவிட்டேன். ஓரளவுக்கு அவருடைய துணைக்கேள்வியிலிருந்து தப்பிக் வேண்டும் என்றால் அதற்கு ஒரு வழி தான் உண்டு. அதாவது நெருப்புக்கோழி பற்றி எனக்கு என்ன தெரியுமோ? அதையெல்லாம் அவரிடம் ஒப்பித்து விட வேண்டியது . அதைவிட வேற வழி எதுவும் கிடையாது. அதனாலே அதே வழியிலேயே போக ஆரம்பித்துவிட்டேன்.

அந்த உலகத்திலே மிகவும் பெரிய பறவை எது என்று கேட்டால் அதற்கும் நெருப்புக்கோழி என்று தான் பதில் சொல்ல வேண்டும். ஏன் என்றால் அது எட்டடி உயரம். 135 கிலோ எடை. அதாவது கிட்டத்தட்ட இரண்டு மூட்டை அரிசியுடைய எடை. எங்கள் மேல் அது வந்து விழுந்தால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். உலகத்திலே மிகவும் பழைமையான உயிரினமும் இதுதானாம். கிட்டத்தட்ட ஒரு 5அல்லது 6 கோடி வருடத்திற்கு முன்னாலே நெருப்புக்கோழி இந்த பூமியிலே இருந்து கொண்டிருக்கிறதாம். உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் சொல்கின்றார்கள்.

அந்தக் காலத்திலே இருந்த பல பிராணிகள் இப்போது இல்லாமல் போய்விட்டது. நெருப்புக்கோழி மட்டுமே இன்றும் இருந்து கொண்டிருக்கிறது என்றால் அது ஆச்சரியம் தான். இப்போது அது அந்த அளவுக்கு அதிகமாக இல்லை. மத்திய ஆபிரிக்காவிலே தான் இப்போது அது அதிகமாக இருக்கிறதாக தெரிகின்றது. எப்போது பாரத்தாலும் இது தீனி தீனி என்று அலைந்து கொண்டே இருக்குமாம். ஒரு நாள் இருக்கின்ற இடத்திலே மறுநாள் இருப்பது இல்லையாம். 30, 40 கோழி சேர்ந்து கூட்டம் கூட்டமாகத் தான் மேயப்போகுமாம். பெட்டையை விட சேவல் கொஞ்சம் பெரிதாக இருக்குமாம். புல், பூண்டு, செடி, கொடி இதைத்தான் சாப்பிடுமாம். சின்னச்சின்னப்புழு, பூச்சி, எலி, பல்லி, ஓணான் இது மாதிரி ஏதாவது நட்டுப்பட்டாலும் விடாதாம்.

சின்னச்சின்ன கல், கூழாங்கல் இதையெல்லாம் கூட அப்பப்போது இது முழுங்கி வைக்கும். எதற்காக? இந்த கல் எல்லாம் உள்ளே போய் கிரைண்டர் மாதிரி வேலை செய்யும் தீனியை அரைத்துக் கொடுப்பதற்காகத் தான் அது உபயோகம். எங்களை மாதிரி அதற்கு பல் இருக்கிறதா? வாயிலேயே அரைத்து விடலாம். பல் இல்லை அதனாலே தான் இப்படி செய்கின்றது. பல் இருந்தும் நாம் சில சமயம் கல்லை முழுங்கி விடுகின்றோம். நெருப்புக்கோழிக்கு ஒரு குணம். கண்ணிற்கு பளபளப்பாக ஏதாவது மின்னிவிட்டால் உடனே அதையும் முழுங்கி விடும். அதனாலே தான் சில பேர் சொல்லுவார்கள் நெருப்புக்கோழி உலோகங்களையெல்லாம் ஆகாரமாகச் சாப்பிடும் என்று. உலோகம் எல்லாம் அதற்கு ஆகாரமில்லை அதையெல்லாம் அதனாலே செரிக்க வைக்கவும் முடியாது.

நெருப்புக்கோழிக்கு பறக்குறது தான் சிரமமே தவிர அது ஓட ஆரம்பித்துவிட்டால் பிடிப்பது கஷ்டம். புலி, சிங்கத்தையெல்லாம் கண்டுவிட்டால் மணிக்கு 40கிலோ மீற்றர் வேகத்திலே ஓடும். வந்து பிடிக்க முடியாது. அது மாதிரி ஓடத் தெரிந்தால் இந்த அறுவை மன்னரிடம் இருந்தும் தப்பித்து ஓடிவிடலாம். முடியவில்லை என்ன செய்வது. அதனாலே தான் நெருப்புக்கோழியைப் பற்றி இவ்வளவு விடயமும் சொல்லி முடித்தேன். இவ்வளவையும் கேட்டதன் பின் அவர் இன்னொரு கேள்வி கேட்டார். சார் நீங்கள் கறிக்கோழியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? என்றார். தெரியுமே புறொயிலர் என்று சொல்வோமே அது தானே என்றேன். ஆமாம் அதுவே தான். இப்போது நான் கேட்பது என்ன என்றால் நெருப்புக்கோழியை கறிக்கோழியாக மாற்ற முடியுமா? என்றார். அது எப்படி முடியும் அது வேற இது வேறே என்றேன். அவர் முடியும் என்றார். எப்படி ? என்றேன். நெருப்பு தண்ணீரிலே நனைத்தால் கரியாகிவிடும். அதனாலே நெருப்புக்கோழியை தண்ணீரிலே நனைத்தால் கறி ஆகிவிடும் என்றார். இப்போது எனக்கு உண்மையாகவே 40 கிலோ மீற்றர் வேகத்திலே ஓட வேண்டும் போல இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா தெற்கு வலயத்தின் விளையாட்டுப் போட்டி 5 வருடங்களுக்குப் பின்னர் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அன்னமலர் சுரேந்திரனின் தலைமையில் மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

(படம்- வசந்தரூபன்)

# நீரினைச் சிக்கனமாக்கும் சொட்டு நீர்ப்பாசன செய்கை வெற்றி

(கண்டாவளை)

**யாழ்.பல்கலைக்கழகத்தின் சமுதாயம் சார் மேம்பாட்டுக்குழுவினால் நீரை மீதப்படுத்த பரீட்சார்த்த முறையில் முன்னெடுக்கப்பட்ட சொட்டு நீர்ப்பாசன முறையிலான மரக்கறிச் செய்கை வெற்றியளித்துள்ளது.**

இதுவரை காலமும் இறைப்பு முறை மூலம் நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்டு மரக்கறிப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் சொட்டு நீர்ப்பாசன முறை மூலம் மரக்கறிச் செய்கை மேற்கொள்வது தொடர்பில் கிளிநொச்சி திருவையாறு பகுதியில் முன்னெடுக்கப்பட்ட பரீட்சாத்த முறையே வெற்றியளித்துள்ளது.

இந்த முறை மூலம் மரக்கறி செய்கைக்கு பயன்படுத் தப்படும் நீரை மீதப்படுத்த முடியும். அதேவேளை தேவையான பசளையை கரைசலாக நீருடன் சேர்த்து நீர் பாய்ச்சுவதனாலும் புற்கள் வளர்வதை தடுப்பதுடன் குறைந்த செலவில் அதிக உற்பத்தியை பெற முடியும் என யாழ்.பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஜே அரசகேசரி தெரிவித்துள்ளார். பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களை விவசாய திணைக்களத்தினரும் நேற்று சென்று பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-100)

# பயிர்ச் செய்கைக்கான நீர்விநியோகம் இடம்பெறவில்லை

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் பயிர்ச் செய்கைக்கான நீரினை விநியோகிக்கும்படி உத்தரவிட்ட போதிலும் நீர் விநியோகம் இடம்பெறவில்லை என ஏற்று நீர்ப்பாசன செய்கையாளர் கவலை தெரிவித்துள்ளனர்.

கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் 100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் தற்போது பயிர்ச் செய்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ஏற்று நீர்ப்பாசன பயிர்ச் செய்கையாளர்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடி நீர் விநியோகிக்கப்படாத காணிக்கு உடனடியாக நீரினை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்ட போதிலும் இதுவரை நீர் குறித்த காணிக்கு விநியோகிக்கப்படவில்லை என ஏற்று நீர்ப்பாசன செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-6-350)

# வன்னேரிக்குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுலா மையம் பயனற்ற நிலையில்


(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் சுமார் 6 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 2017 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மையமானது எந்த வித பயன்பாடுகளும் இல்லாது பாழடைந்த நிலையில் காணப்படுவதாக பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தினை சுற்றுலா பிரதேசமாக அறிவிக்கப்பட்டு குறித்த பகுதியில் சுற்றுலா விடுதி ஒன்று வடக்கு மாகாண சபையினால் குறித் தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் மூலம் சுமார் ஆறு மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 2017 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மையமானது இன்று வரை எந்த பயன்பாடுகளும் இன்றி பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. இவ்வாறு பாழடைந்த நிலையில் காணப்படுகின்ற சுற்றுலா மையத்தினை பாதுகாப்பதற்கு உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளனர். (நி-6-315)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3166

ராஜ்





நவீன்




தனுஷ்




மிதுளா




மாதுரி




வைசாலி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** **பாகம் - 3**

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர்

**531**





அதைப் பற்றிச் சொன்னார்."

"பைத்தியக்காரத்தனம். கிரஹங்கள், நட்சத்திரங்களின் சக்தியைக் காட்டிலும் என்னுடைய மந்திரசக்தி வலியது. அமைதி குடி கொண்டிருந்த கடலில் நான் மந்திரம் ஜபித்துச் சுழற்காற்றை வருவித்தேன் என்பது தங்களுக்குத் தெரியுமா? முதலில் அந்தக் காஞ்சிநகர் ஒற்றனும் அதை நம்பவில்லை. பிற்பாடு கடலில் முழுகி உயிரை விடும்போது, கட்டாயம் நம்பியிருப்பான்!"

மந்திரவாதியும் நந்தினியும் மெல்லிய குரலில் பேசிய போதிலும், அவர்களுடைய பேச்சு பெரும்பாலும் அவள் காதில் விழுந்தது.

இளவரசரைக் கடல் கொண்டது என்பதில் தனக்கு நம்பிக்கையில்லை என்று நந்தினி கூறியதற்கு மந்திரவாதி "ராணி! என் பேச்சில் உங்களுக்கு எப்போதுமே நம்பிக்கையிருப்பதில்லை. எதனால் இப்போது அவநம்பிக்கைப்படுகிறீர்கள்?" என்று கேட்டான்.

இளவரசரின் ஜாதக பலத்தைப் பற்றி நீ கேட்டதில்லையா? சற்று முன்னால் கூடக் குழகர் கோவில் பட்டர் அதைப் பற்றிச் சொன்னார்."

"அவன் கடலில் மூழ்கி இறந்ததை நீ பார்த்தாயா? நான் பார்க்காவிட்டால் என்ன? அவன் இருந்த கப்பல் தீப்பிடித்து எரிந்ததைப் பார்த்தேன்."

பிடித்த கப்பலிலிருந்து அவனைத் தப்புவிக்க இளவரசர் கடலில் குதித்துப் போனாராமே? போனவர் திரும்பி வந்தாரா? திரும்பிப் பல்லவனுடைய கப்பலுக்கு வரவில்லை.

பின்பு என்ன? இரண்டு பகைவர்களும் ஒரே நாளில் பலியாவதற்காகவே வந்தியத்தேவனை உயிரோடு விட்டுவிட்டு வந்தேன்.

நீ என்னதான் சொன்னாலும், என் மனம் நம்பவில்லை. அவர்கள் இருவரும் இன்னும் உயிரோடிருப்பதாக என் மனத்திற்குள் ஏதோ சொல்லுகிறது. பூங்குழலியை உனக்குத் தெரியுமா?

நன்றாய்த் தெரியும். இலங்கையில் அவள் எங்களுக்குத் தொல்லையாயிருந்தாள். அவளும் சுழற்காற்றில் போயிருக்கலாம்.

அதுதான் இல்லை. சிறிது நேரத்துக்கு முன்பு ஒரு படகு தூரத்தில் வந்தது. கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து ராக்கம்மாள் பார்த்தாளாம். திடீரென்று அது மறைந்து விட்டதாம். படகில் இரண்டு மூன்று பேர் இருந்ததாகத் தோன்றியதாம்.

அப்படியானால் தாங்கள் கிழவரை அழைத்து கொண்டு உடனே நடையைக் கட்டுங்கள். நான் இருந்து பார்த்துக் கொண்டு வருகிறேன்."

நாங்கள் இருந்தால் என்ன?

கிழவர் இருந்தால் இளவரசருக்கு இராஜ மரியாதைகள் செய்து அழைத்துக் கொண்டு போகப் பார்ப்பார், காரியமெல்லாம் கெட்டுப் போகும்.

"மந்திரவாதி! நானும் தான் கேட்கிறேன். அவர்கள் இறக்க வேண்டிய அவசியம் என்ன? மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டிவிட எல்லாரும் சம்மதித்து விட்டால்.

அம்மணி! பெண்புத்தியைக் காட்டிவிட வேண்டாம். காஞ்சி ஒற்றனுக்கு நம் இரகசியம் எல்லாம் தெரியும். அவன் இளவரசரிடமும், சொல்லியிருப்பான். பொழுது விடிவதற்குள் நீங்கள் புறப்பட்டுச் சொல்லுங்கள். ராக்கம்மா! பூங்குழலி அவர்களை அழைத்து வந்தால் காட்டில் எங்கே வைத்திருப்பாள்?

"மறைந்த மண்டபம் ஒன்று இருக்கிறது. அதுதான் அவளுடைய அந்தரங்க வாசஸ்தலம். காஞ்சி ஒற்றனை அதிலேதான் ஒரு பகல் முழுவதும் மறைத்து வைத்திருந்தாள். பிறகு அதை நான் கண்டுபிடித்தேன்.

நல்லது அந்த மறைந்த மண்டபம் இருக்கும் இடம் எனக்குத் தெரியும். அங்கே போயக் காத்திருக்கின்றேன். ராணி சக்கரவர்த்தி எப்படி இருக்கிறார். ஏதாவது செய்தி உண்டா? எந்த சக்கரவரத்தியை பற்றி கேட்கிறாய்.(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குதிரைக் கடிவாளமும் மொட்டையும்



ஒரு ஊரில் ஒரு ராஜா வீரத்தில் வல்லவர். தனது நாட்டை சீரும் சிறப்புமாக அரசாட்சி செய்து வந்தார். அவருக்கு ஒரு மந்திரி இருந்தார். ராணியும் மந்திரியின் மனைவியும் நெருங்கிய தோழிகள்.

ஒருநாள் மாலை யில் அந்தப்புரத்தில் ராஜாவுக்கும் ராணிக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது. ராஜா எவ்வளவோ கூறியும் ராணி சமாதானமாக வில்லை.

உன் கோபம் தணிய நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார் ராஜா.

நீங்கள் ஒரு குதிரையைப் போலக் கடிவாளம் கட்டிக்கொண்டு, என்னைச் சுமந்து கொண்டு குதிரையைப் போலவே கனைக்க வேண்டும் என்றாள்.

வேறு வழி இல்லாததால் ராஜாவும் அதே போல் செய்தார். ராணி யின் கோபம் தணிந் தது.

ராணியின் தோழியாகிய மந்திரியின் மனைவி இதைப் பார்த்து விட்டாள். அவளும், தன் கணவரிடம் எந்தக் காரணமும் இல்லாமல் கோபித்துக்கொண்டாள்.

உன் கோபம் தணிய நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார் மந்திரி.

நீங்கள் உங்கள் தலையினை மொட்டையடித்துக் கொண்டு என்னைச் சுற்றி வந்து என் காலில் விழுந்து வணங்க வேண்டும்! என்றாள் அவள்.

வேறு வழி இல்லாததால் மந்திரி, தன் தலையினை மொட்டையடித்துக் கொண்டார். தன் மனைவியைச் சுற்றி வந்து அவள் காலில் விழுந்து வணங்கினார்.

மறுநாள் அரசபைக்கு வந்த மந்திரியைப் பார்த்த ராஜா, என்ன மந்திரியாரே! திடீரென்று மொட்டை போட்டுள்ளீர்? என்றார்.

அதற்கு மந்திரி, ராஜா! தாங்கள் குதிரையைப் போலக் கனைத்ததால்தான் நான் திடீரென்று மொட்டை போட வேண்டியதாயிற்று என்றார்.

அரசவையில் இருந்தவர்களுக்கு ஏதும் புரியவில்லை. பின்னாளில் இதன் காரணத்தைத் தெரிந்து கொண்டவர்கள் மந்திரிக்குத் தலைமுடி வளரும் வரை அவரைக் கேலி செய்தனர்.

குதிரை கனைக்கும் சப்தத்தைக் கேட்கும் போதெல்லாம் ராஜாவை நினைத்துச் சிரித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரே போகும் நிலைவந்தாலும் தைரியத்தை விடாதே. நீ சாதிக்கப் பிறந்தவன். துணிந்து நில்; எதையும் வெல்வாய். *- விவேகானந்தர்.*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கடவுளுக்குச் சமமான மருத்துவர்களின் மனங்களை நோகடித்து விடாதீர்கள்

வட மாகாணத்தில் மருத்துவத் துறையில் உருவாகிய தாழமுக்கம் இன்னமும் கலைவதாக இல்லை.

சாவகச்சேரி வைத்தியசாலையில் கருக்கட்டிய இத்தாழமுக்கம் நாலா பக்கமும் நகர்ந்து வருகிறது.

இடையிடையே பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தைத் தாக்கி, பின்னர் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையை நெருங்கியுள்ளது.

ஒரு சிறிய காற்று வீசினால்கூட, தாழமுக்கம் கன மழையாக - பெரும் சூறாவளியாக மாற்றமடைவதைக் காணமுடிகிறது.

அந்தளவுக்கு மருத்துவத்துறை மீது நம் மக்கள் கடும் கோபத்திலும் ஆத்திரத்திலும் உள்ளனர்.

உண்மை. மருத்துவர்கள் அர்ப்பணிப்போடு சேவையாற்றுகின்றனர் என்று ஒரு பதிவைப் போட்டால்கூட, அவ்வளவுதான், அதனை பொதுமக்கள் வறுத்தெடுக்கின்றனர்.

இவ்வாறு கொதித்தெழுகின்ற நம் மக்கள் ஏதோவொரு வகையில் இழப்புக்களின் வலிகளோடு வாழ்கின்றவர்கள்.

அதிலும் மருத்துவ சேவை சரியாகக் கிடைக்காததால் - மருத்துவர்களின் கவனிப்பு இல்லாததால் தம் உற்ற உறவைப் பறிகொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது என்ற வேதனையோடு இருக்கிறவர்கள், நம் மருத்துவர்கள் மீது கொண்டுள்ள ஆத்திரத்தைக் கொட்டித் தீர்க்கத் தகித்துக் கொண்டிருந்தனர்.

இந்த வேளையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் தாழமுக்கம் கருக்கட்டியது.

அந்தத் தாழமுக்கம் கொட்டித் தள்ளுகின்ற வெள்ளத்தில் - சுழன்றடிக்கின்ற சூறாவளியில், நம் வைத்தியசாலை மருத்துவப் பிரிவுசிக் குண்டு சின்னாபின்னப்படுகிறது.

இதைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. எங்கள் மாணவர்களின் சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவரும்போது, உச்சப் பெறுபேறு பெற்றவர்களை ஊடகவியலாளர்கள் செவ்வி காண்பார்கள்.

அதன்போது அந்த மாணவர்கள்; எதிர்காலத்தில் மருத்துவர்களாக வந்து மக்களுக்கு சேவையாற்றுவதுதான் எமது இலட்சியம் என்று சொல்வார்கள்.

அவ்வாறு கூறுபவர்கள் மருத்துவர்களாகவும் வந்துள்ளனர். ஆனால் அவர்கள் கூறிய மருத்துவ சேவையைத்தான் காணவில்லை.

மருத்துவனாக வந்து மக்களுக்கு சேவையாற்றுவதுதான் என் இலட்சியம் என்று 16 வயதில் கூறிய மாணவர்கள் மருத்துவராக வந்ததும் தாம் கூறியதை இழந்தும் மறந்தும் போகின்றார்கள் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் மருத்துவர்களாக உருவாகும்போது கற்றறிந்த பாடமும் அவர்கள் நடைமுறையில் கண்ணுற்ற மருத்துவர்களும் என்பது மறுக்க முடியாத உண்மை.

எதுஎவ்வாறாயினும் கடவுளுக்கு ஒப்பான மருத்துவர்கள் இன்னமும் நம் மண்ணில் உள்ளனர். மக்கள் சேவைதான் அவர்களின் ஒரே இலட்சியம்.

எனவே நகருகின்ற தாழமுக்கம் கடவுளுக்கு சமானமாக இருக்கக்கூடிய மருத்துவர்களின் மனங்களை இம்மியும் நோகடிக்காமல் பார்த்துக் கொள்வது நம் அனைவரதும் கடமையாகும்.

# ஒழுக்கம் இல்லாத நாடு ஒருபோதும் முன்னேற்றம் அடையமுடியாது

### நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

ஒழுக்கம் இல்லாத நாடு ஒருபோதும் முன்னேற்றம் அடையமுடியாதென நீதி மற்றும் சிறைச்சாலை விவகார அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலி கரந்தெனிய ஸ்ரீஅபயதிஸ்ஸ பிரிவெனாவில் இடம்பெற்ற அமரபுர மகா நிக்காய ஆரியவன்ச சத்தம்ம பீடத்தின் 44ஆவது உபசம்பதா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய விஜயதாச ராஜபக்ஷ ஒழுக்கம் இல்லாவிட்டால் சாசனம் அழிந்து விடும் என்பதை போன்று ஒழுக்கம் இல்லாத நாடும் வீழ்ச்சியை நோக்கி பயணிக்கும்என்று குறிப்பிட்டார்.

புத்த தர்மத்தின் முன்னுதாரணம் நாட்டின் முன்னேற்றத்துக்கு மிக அவசியமானதாககாணப்படுகிறது.

இலங்கையில் உபசம்பதா இல்லாத காலத்தில், தாய்லாந்தில் இருந்து அதனை கொண்டு வருவதற்காக எமது பிக்குகள் மூன்று தடவை தாய்லாந்து செல்ல வேண்டியிருந்தது.

பல இன்னல்களுக்கு மத்தியில் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லப்பட்டிருந்த இந்த உபசம்பதா முறைமையை பாதுகாக்க மகா சங்கத்தினர் மிகவும் பாடுபட்டிருந்தனர் என்றார். (ம-7)

### தேர்தலுக்கு நாங்கள் தயார்

# தேர்தலைப் பிற்போடும் தேவை எதிர்க்கட்சிகளுக்கே உள்ளது

### அமைச்சர் கஞ்சன விஜேசேகர

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை. மாறாக தேர்தலை பிற்போடும் தேவை எதிர்க்கட்சிகளுக்கே உள்ளாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய கஞ்சன ஜனாதிபதித் தேர்தலை உரிய காலப் பகுதியில் நடத்துமாறு எதிர்க் கட்சிகள் கோருகின்றன. தேர்தலை நடத்துவதற்காக அரச தரப்பில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அறிவித்துள்ளார். சட்டமா அதிபர் நீதிமன்றில் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறுவருடங்கள் அல்ல ஐந்து வருடங்கள்தான் என கூறியிருந்தார். நீதிமன்றத் தீர்ப்பும் உள்ளது. இவ்வாறான சூழலில் நாட்டு மக்களது பிரச்சினைகளை வேறு பக்கம் திசை திருப்பும் நோக்கில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விடயத்தை கையில் எடுத்துள்ளனர்.

அரசாங்கம் தேர்தலை பிற்போட நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. மாறாக எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் செயல்படும் தொழிற் சங்கங்களே போராட்டங்கள் ஊடாக தேர்தலை நடத்துவதற்கு தடைகளை ஏற்படுத்தி வருகின்றன. தேர்தல் நடைபெற கிராம சேவகர்கள், தபால் திணைக்களம் மற்றும் போக்குவரத்து துறையினரின் பங்களிப்பு அவசியமாகும். இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டால் தேர்தல் நடத்துவதில் பாதிப்புகள் ஏற்படலாம்.

தேர்தல்கள் ஆணைக்குழுவை சந்தித்த பெப்ரல் அமைப்பு, ஜனாதிபதித் தேர்தலை நடத்த நிதி ஒதுக்கீடுகள் முதல் அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு கூறியதாக தெரிவித்துள்ளது. சட்டத்தில் சிக்கல்கள் இல்லாத சூழலில் அரசாங்கமும், தேர்தல்கள் ஆணைக்குழுவும், தேர்தலை நடத்த தயார் நிலையில் இருக்கும் சூழலில் எதிர்க்கட்சிகள் எதற்காக இவ்வாறான பிரேரணைகளை கொண்டுவருகின்றன?மக்களின் பிரச்சினைகளை மறைத்து தேர்தல் தொடர்பான எண்ணங்களை உருவாக்குவதே இவர்களது நோக்கம்.

தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது. தேர்தல்களை பிற்போட நாங்கள் கை உயர்த்த மாட்டோம். எதிர்க்கட்சியினருக்கு தேர்தல்களை பிற்போட கை உயர்த்தி பழக்கம் உள்ளது எனறார். (ம-7)

## ஓகஸ்ட் முதலாம் திகதி டயானாக்கு எதிரான வழக்கு

இலங்கை குடியுரிமையின்றி இலங்கையின் கடவுச்சீட்டைப் பெற்றதாகக் கூறப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிரான குற்றச்சாட்டை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வாசிப்பதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாடு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனவல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபரான டயானா கமகேவுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை நீதிமன்றில் முன்வைத்தனர்.

இதன்படி, குறித்த குற்றப் பத்திரிகையை ஓகஸ்ட் மாதம் 1ஆம் திகதி கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் வாசிக்குமாறு மேலதிக நீதவான் உத்தரவிட்டார். (ம-7)

## மலையகப் பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரியர் நியமனம்

மலையகத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனத்தை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வரை பெறப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் 1,700 பட்டதாரிகள் மலையகத்தில் உள்ளனர்.

அதேநேரம், தொடர்ந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருவதுடன், அவர்களுக்கான நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார் தெரிவித்துள்ளார். (ம-7)

## மாவைக் கந்தனின் காம்யோற்சவம்

(மாவிட்டபுரம்)

குண்ம முகம் நீங்கட் பொருட்டு சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியினால் பூஜிக்கப்பட்ட பழம்பெரும் முருக தலமான மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த காம்யோற்சவமானது நேற்று வியாழக்கிழமை பக்தி பூர்வமாக ஆரம்பமாகி ஆடிஅமாவாசையினை தீர்த்தமாக கொண்டு தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ளது

இவ்வாலய காம்யோற்சவந்தனில் எதிர்வரும் திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் சண்முகர் திருநடனமும் 29.07 திங்கட்கிழமை திருக்கார்த்திகை உற்சவமும் 03.08.2024 சனிக்கிழமை இரதோற்சவமும் ஆடிஅமாவாசை தினமான மறுநாள் கண்டகி தீர்த்தக் கரையில் தீர்த்தோற்சவமும் சிறப்புற இடம்பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

16

கற்பழிப்பு அச்சுறுத்தல்களுக்கு பயந்து, இந்துக் குடும்பங்களைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் ஜெஸ்ஸூர், தினாஜ்பூர் மற்றும் தாக்குர்கான் அபய்நகர் ஆகிய இடங்களில் உள்ள அவர்களது உறவினர்களின் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். தினாஜ்பூர், ரங்பூர், போக்ரா, லால்மோனிர்ஹாட், ராஜ்ஷாஹி, சிட்டகாங் மற்றும் ஜெசோர் ஆகிய இடங்களிலும் தாக்குதல்கள் நடந்தன.

தேர்தலுக்கு முன்பு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் காவல்துறையினரால் கொல்லப்பட்டதாகவும் தன்னிச்சையாக கைது செய்யப்பட்டதாகவும் செய்திகள் வந்தன. மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் படி, பங்களாதேஷ் பொலிஸார் "ஆயிரக்கணக்கான" எதிர்க்கட்சி உறுப்பினர்களை கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்தன.

எதிர்க்கட்சிகளின் அரசியல் நிகழ்வுகளின் அமைப்பிலும் அரசாங்கம் தலையிட்டது. 2013 டிசம்பரில் பாதுகாப்பு காரணங்களைக் காட்டி, தேர்தலுக்கு முந்தைய பேரணிகளை நடத்துவதை எதிர்ப்பவர்களை காவல்துறை தடுத்தது. பிஎன்பி ஆதரவாளர்கள் கட்சி தலைமையகத்திற்கு வெளியே கூட்டங்களை ஏற்பாடு செய்வதையும் காவல்துறை தடுத்தது. பெரும்பாலும் எதிர்க்கட்சித் தலைவர்கள் தேர்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வேலைநிறுத்தங்களை அறிவித்த சிறிது நேரத்திலேயே தடுத்து வைக்கப்பட்டனர்.

ஒரு சந்தர்ப்பத்தில், டிசம்பர் 29 அன்று "ஜனநாயகத்திற்கான அணிவகுப்பு" நடத்தப்போவதாக எதிர்க்கட்சி அறிவித்த உடனேயே, அதிகாரிகள், 203 எதிர்க்கட்சி தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை டிசம்பர் 26 அன்று கைது செய்தனர்.

கலிதா ஜியா டிசம்பர் 26 அன்று ஒரு பேரணியில் பங்கேற்பதற்காக தனது வீட்டை விட்டு வெளியேறாது தடுக்கப்பட்டார். மேலும் அவர் தேர்தல் வரை வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். ஜியா வீட்டுக்காவலில் இருப்பதை அரசாங்கம் மறுத்தது. ஜியாவின் ஆலோசகர் ஷம்ஷேர் மொபின் சவுத்ரி மற்றும் எனாம் அகமது சவுத்ரி ஆகியோர் டிசம்பர் 29 அன்று கைது செய்யப்பட்டனர்.

தேர்தலுக்கு முன், அரசாங்கம் எதிர்க்கட்சி ஒளிபரப்பை கட்டுப்படுத்தியது. 2013 இல், ஆளும் அவாமி லீக் தொலைக்காட்சி நிலையங்களை மூடியது மற்றும் ஒரு முக்கிய செய்தித்தாள் ஆசிரியரை தடுத்து வைத்தது. வன்முறையைத் தடுக்க இந்த நடவடிக்கை அவசியம் என்று அரசாங்கம் கூறியது. ஆனால் எதிர்க்கட்சிகள் இதை அரசியல் உள்நோக்கம் கொண்டதாகக் கருதின.

புறக்கணிப்பின் விளைவாக, அவாமி லீக் போட்டியின்றி தெரிவான 153 இடங்களில் 127 இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதே போல், ரௌஷன் எர்ஷாத்தின் (எச்.எம். எர்ஷாத்தின் மனைவி) ஜாதியா கட்சி போட்டியின்றி 21 இடங்களிலும், ஜாதிய சமாஜ்தந்திரிக் தளம் மூன்று இடங்களிலும், தொழிலாளர் கட்சி 2 இடங்களிலும், ஜாதியா கட்சி (மஞ்சு) ஒரு இடத்திலும் வென்றன.

E.U., U.S. மற்றும் Commonwealth ஆகிய நாடுகள் பகிஷ்கரிப்பு காரணமாக தேர்தலின் நம்பகத்தன்மை குறித்து கவலை கொண்டதால் பார்வையாளர்களை அனுப்ப் போவதில்லை என்று அறிவித்தன.

### 2014 பங்களாதேஷ் பொதுத் தேர்தல்

ஜனவரி 24, 2014 அன்று பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன், 90 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற அரசியலமைப்புச் சட்டத்தின் படி, வங்காளதேசத்தில் 5 ஜனவரி 2014 அன்று பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறவில்லை.

எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியும் அதன் கூட்டணிக் கட்சியான ஜமாத்-இ-இஸ்லாமியும் ஏற்கனவே தேர்தலைப் புறக்கணித்திருந்தன. எதிர்க்கட்சிகளின் தொடர்ச்சியான வேலைநிறுத்தங்கள் மற்றும் வன்முறைகளால் தேர்தல் கட்டமைவு சிதைந்தது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பரவலான கைதுகள், வன்முறை மற்றும் எதிர்க்கட்சிகளின் வேலைநிறுத்தங்கள், மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் மற்றும் அரசாங்கத்தால் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் எல்லாம் இடம்பெற்றன. தேர்தல் நாளில் சுமார் 21 பேர் கொல்லப்பட்டனர்.

300 இடங்களில் 153 உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். மீதமுள்ள 147 தொகுதிகளில் (போட்டியிட்ட) 139 இடங்களின் முடிவுகள் வெளியிடப்பட்டன அவாமி லீக் 105 இடங்களிலும், முன்னாள் ராணுவ சர்வாதிகாரி எச் எம் எர்ஷாத் தலைமையிலான ஜாதியா கட்சி (ஜேபி) 13 இடங்களிலும், பங்களாதேஷ் தொழிலாளர் கட்சி (அவாமி லீக்கின் கூட்டாளி) 4 இடங்களிலும், ஜாதிய சமாஜதந்திரிக் தளம் (ஜேஎஸ்டி) 2 இடங்களிலும் வெற்றி பெற்றன. தரிக்கத் ஃபெடரேஷன் 1 இடம் மற்றும் புதிதாகத் தொடங்கப்பட்ட பங்களாதேஷ் தேசிய முன்னணி (பிஎன்எஃப்) 1 இடம் கிடைத்தது.

மீதமுள்ள 8 தொகுதிகளுக்கான தேர்தல் வன்முறை காரணமாக இடைநிறுத்தப்பட்டு பின்னர் தேர்தல் நடைபெற்றது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்பிக்கள் ஜனவரி 9ஆம் திகதி பதவியேற்றனர்.

புறக்கணிப்பு மற்றும் வன்முறையின் விளைவாக, முந்தைய சில தேர்தல்களை விட, தேர்தல் நடந்த 147 தொகுதிகளில் 40% மட்டுமே வாக்களிப்பு நடைபெற்றிருந்தது, தலைநகர் டாக்காவில் 22% ஆக இருந்தது. தேர்தலுக்குப் பிறகு, அவாமி லீக்கை ஆதரிப்பதாகக் கருதப்படும் சிறுபான்மையினர் மீது, குறிப்பாக இந்துக்கள் மீது, தாக்குதல் சம்பவங்கள் நடந்தன.

### 2014 பங்களாதேஷ் இந்து எதிர்ப்பு வன்முறை

2014ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் வாக்குப்பதிவுக்குப் பிறகு தொழிலாளர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்கள் சிறுபான்மை பெங்காலி இந்துக்களை தாக்கத் தொடங்கினர். நாடு முழுவதும் பல மாவட்டங்களில் இந்துக்களின் வீடுகளை சூறையாடுதல், சேதப்படுத்துதல் மற்றும் தீ வைத்து கொளுத்துதல் போன்றவை நடந்தன. இந்த தாக்குதல் தொடர்பாக ஜமாத்-இ-இஸ்லாமி மற்றும் பங்களாதேஷ் தேசியவாத கட்சியைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

தேர்தலுக்குப் பிறகு இந்துக்கள் மீதான தாக்குதல்களுக்கு அரசாங்கமே பொறுப்பு என்று தேசிய மனித உரிமைகள் ஆணையம் கூறியது. இந்தியாவில், எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சி சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களைக் கண்டித்தது.

### சிட்டகாங் பிரதேசத்தில் நடந்த இந்துகளுக்கு எதிரான தாக்குதல்கள்

ஜனவரி 5 அன்று, மாலையில், சிட்டகாங் மாவட்டத்தின் சட்கானியா உபாசிலா (உபாசிலா என்பது பங்களாதேஷில் நிர்வாகப் பிரிவு). லோகாரா உபாசிலா மற்றும் பன்ஷ்காலி உபாசிலா ஆகிய இடங்களில் இந்துக்கள் தாக்கப்பட்டனர். ஜமாத்-இ-இஸ்லாமி மற்றும் இஸ்லாமிய சத்ரா ஷிபிரின் பணியாளர்கள் குறைந்தது 150 இந்து வீடுகளுக்கு தீ வைத்தனர். லோகாரா உபாசிலாவில், ஜமாத்-இ-இஸ்லாமி மற்றும் பிஎன்பியின் செயற்பாட்டாளர்கள் கொலுஜன் பகுதியில் உள்ள ஹிந்துர் ஹாட்டில் இந்துக்களுக்குச் சொந்தமான கடைகளை சூறையாடி சேதப்படுத்தினர். இந்து கோவிலையும் சேதப்படுத்த முயன்றனர்.

லக்ஷ்மிபூர் மாவட்டத்தில், ஜனவரி 9 அன்று இரவு, ராம்கஞ்ச் உபாசிலாவின் கீழ் உள்ள நாராயண்பூர் கிராமத்தில் உள்ள ஒரு காளி கோயில் தீ வைத்து எரிக்கப்பட்டது.

ஃபெனி மாவட்டத்தின் சோனகாசி உபாசிலாவில் ஜனவரி 16 அன்று இஸ்லாமிய அடிப்படைவாதிகள் ஸ்ரீ ஸ்ரீ தக்ஷினாஷ்வர் கோவிலை எரித்தனர். கோயிலில் இருந்த மதிப்புமிக்க பொருட்களையும் கொள்ளையடித்தனர்.

### டாக்கா பிரதேசத்தில் நடந்த இந்துகளுக்கு எதிரான தாக்குதல்கள்

நேத்ரகோனா மாவட்டத்தில், ஜனவரி 7ஆம் திகதி நள்ளிரவுக்குப் பிறகு காளி கோயில் ஒன்று சேதப்படுத்தப்பட்டு தீவைக்கப்பட்டது. நேத்ரகோனா மாவட்டத்தின் சதர் உபாசிலாவின் படே-துத்கோரா கிராமத்தில், இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மற்றொரு காளி கோயிலை எரித்தனர். உள்ளூர் யூனியன் பரிஷத் உறுப்பினராக இருந்த திரு. சாந்தனின் வீட்டில் இந்த கோவில் அமைந்திருந்தது.

காசிபூர் மாவட்டத்தில், ஜனவரி 10 அதிகாலையில், சந்த்பூர் யூனியனின் கபாசியா உபாசிலாவின் கீழ் உள்ள பகோடி மாலிபாரி பகுதியில் உள்ள இந்து குடும்பத்தின் வீட்டுத் தோட்டத்தில் அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் தீ வைத்து எரித்தனர்.

டாக்கா சிட்டி கார்ப்பரேஷன் தெற்கு மண்டலத்தில் வங்காள தேசத்தில் உள்ள இஸ்கான் (ISKCON) தலைமையகமான சுவாமிபாக்கில் உள்ள கிருஷ்ணா உணர்வுக்கான சர்வதேச சங்கம் (ISKCON) கோயில், 30 ஜூன் 2014 அன்று இரவு சுமார் 10:20 மணிக்கு (உள்ளூர் நேரம்) 100இற்கும் மேற்பட்ட முஸ்லிம்களால் தாக்கப்பட்டது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

கிழமை உயிரிழந்துள்ளார்.

முன்னாள் நகர பிதாவான வேலுப்பிள்ளை நவரத்தினராசா என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 29ஆம் திகதி முல்லைத்தீவு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது புளியம் பொக்கணை பகுதியில், பாதுகாப்பற்ற நிலையில் வீதியில் அமைக்கப்பட்ட சிறு மேட்டில் (பம்மிங்) மோதி விபத்துக்குள்ளானார்.

விபத்தில் படுகாயமடைந்தவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (ம-7,60)

## முறிகண்டியில்...

கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹயஸ் ரக வாகனம் ஒன்று முன்னே சென்று கொண்டிருந்த பார ஊர்தி ஒன்றுடன் மோதி குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது

இந்த விபத்தில் படுகாயமடைந்த நால்வரும் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

## புலிகளால்...

டுள்ளன.

மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த ஆயுதங்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, விடுதலைப் புலிகளால் எட்டு அடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த இந்த ஆயுதங்களை கண்டுபிடித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, 299 ஆளணி எதிர்ப்பு கண்ணிவெடிகள், 07.62 mm 39 டெட்டனேட்டர்கள் 38 மற்றும் 19,930 உயிர்க்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஏறாவூர் நீதவான் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இந்த குண்டுகள் மற்றும் தோட்டாக்கள் விசாரணைக்காக கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 252 இந்திய...

அவர்களின் 35 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலையும் நெடுந்தீவு பகுதியில் 3 படகுகளுடன் 13 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வேகக் கட்டுப்...

குள் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு கடந்த மாதம் 30 ஆம் திகதி வரை 1103 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளதுடன், அந்த வீதி விபத்துகளால் 1154 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே, இந்நிலைமையைக் குறைக்க எமது அமைச்சு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது என்றார். (ம-7)

## 7ஆம் நாளில்...

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதை குழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வின், ஏழாம் நாள் அகழ்வாய்வு செயற்பாடுகள் நேற்று தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றுதல்களுடன் இந்த ஏழாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தன.

மூன்றாம் நாளாகவும் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகத்தின் மனித உரிமைகள் அலுவலர் செல்ரின் அகிலன் அவர்கள் அகழ்வுப் பணிகளை கண்காணித்தார்.

குறித்த அகழ்வுப் பணியின்போது ஏழு மனித உடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மூன்று மனித எச்சங்கள் முழுமையாக வெளியே எடுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை மொத்தமாக 43 எலும்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ ஏழாம் நாள் அகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஏழு மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் நேற்று மூன்று எலும்புக் கூட்டு தொகுதிகள் முழுமையாக வெளியே அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அவ் எலும்புக் கூட்டுத்தொகுதிகளில் இருந்து பற்கள் பிரித்து எடுக்கப்பட்டு DNA பரிசோதனைக்காக சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் எலும்புக் கூட்டுத் தொகுதிகளில் இருந்து த.வி.பு ஓ-3035 இலக்கத்தகடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் துப்பாக்கி சன்னங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ம -7,299)

## யாழ்...

விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம், சுன்னாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தபால் நிலைய கட்டடத் திறப்பு விழா, கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு மீன்பிடி சாதனங்கள் மற்றும் உலர் உணவுகள் விநியோக நிகழ்வு, தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட அரச ஊழியர் குழுவிற்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வுகளில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன பங்கேற்கவுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள புதிய வர்த்தக சேவை நிலையத் திறப்பு விழா, கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் பிரதமர் பங்கேற்பார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக்குழு குழுவின் தலைவர் என்ற வகையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த அழைப்புக்கமைய பிரதமர் தினேஷ் குணவர்தனவின் விஜயம் திட்டமிடப்பட்டுள்ளது. (ம-7,33)

## புறக்கணிப்பு...

அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொடருந்து நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி இன்று முதல் வழமை போல தொடருந்து சேவைகள் இடம்பெறும் என அந்த தொழிற்சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.07.11
சீட்டிழுப்பு இலக்கம் 5531
C 3 3 1 4 4 0
அத சம்பத
C 1 4 4 0
சீட்டிழுப்பு இலக்கம் 106

தன நிதானய
திகதி - 2024.07.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1561
R 02 10 21 79 R
Double Chance 78474

மெகா பவர்
திகதி 11/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1879
Y 25 19 26 28 56
Double Chance 10752

லக்கி 7 VIP
திகதி 2024.07.11
சீட்டிழுப்பு இலக்கம் 357
N 0 1 7 7 8 7 N

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3773
சீட்டிழுப்பு திகதி 11.07.2024
U 25 32 35 42
U 25189

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.11
சீட்டிழுப்பு இலக்கம் 0840
கடகம் 25 36 38 54 கடகம்
80093 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
11.07.2024 வெற்றி வாரம் 239 வர்ணம் மஞ்சள்
B 7 2 3 8 1 2
33660
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,407,072.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2505 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 11.07.2024 தினம் வியாழன்
09 12 13 74 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 98,245,492.00

சனிதா
திகதி 2024.07.11 வெற்றி வாரம் 4668 வர்ணம் சிவப்பு
08 20 30 57 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,824,934.00
45644

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4217 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.07.11 தினம் வியாழக்கிழமை
21 24 34 48 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,438,530.40
555554

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 05 21 45 61 68
1681 11.07.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 532,578,610.60

அட கோட்டிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை வெற்றி வாரம் : 2331
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 127,062,624.00
51 52 54 63 Y
964961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**DCM** யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
**A/L 2026**
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் : 13.07.2024 சனி காலை 8.00 மணி
நிர்வாகம் : 077 7789 815
(C-0775)


# யுக்திய நடவடிக்கை 728 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப் பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்ப ட்டவர்களில் 718 ஆண்களும் 10 பெண்களும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 34 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் 81 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப் பிவைக்கப்ப ட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 147 கிராம் 507 மில்லிகிராம் ஹெரோயின், 246 கிராம் 261 மில்லிகிராம் ஐஸ், 29,709 கிராம் 06 மில்லிகிராம் கஞ்சா, 5,204 கஞ்சா செடிகள் மற்றும் 134 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்ப ட்டுள்ளன. (ம-7)


## மணமகள் தேவை

- இணுவில், இந்து, கௌரவ குலம், 1990, அனுசம், Quantity Surveyor, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சங்கானை, இந்து, கௌரவ குலம், 1992, விசாகம், BA(Hons), Accountant, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோப்பாய், இந்து, கௌரவ குலம், 1984, சதயம், MBBS Doctor, Ireland Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பளை, இந்து, கௌரவ குலம், 1984, அவிட்டம், Phd, Divorce, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- வண்ணார்பண்ணை, இந்து, கௌரவ குலம், 1976, ரேவதி, MBBS Doctor, divorce, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நீர்வேலி, இந்து, கௌரவ குலம், 1989, சுவாதி, Phd in chemistry, South Korea மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- திருநெல்வேலி, இந்து,கௌரவகுலம், 1987, ஆயிலியம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- யாழ், இந்து, கௌரவ குலம், 1986, மகம், MSc, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோப்பாய், இந்து, கௌரவ குலம், 1988, பூரட்டாதி, MBA, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மயிலிட்டி, இந்து, கௌரவ குலம், 1981, அத்தம், Accountant, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(151)

S.Sharma J.P Astrologer | - 077 539 3728 | - 077 803 8193

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
(149)

**074 17 37 684**

## தேவை

- மில் வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.(ஆண்கள், பெண்கள்)
- கடை ஒன்றிற்கு முகாமையாளர் தேவை. மல்லாகம், சுன்னாகம், அளவெட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள்.(ஆண்கள்)

(152)

தொடர்பு: **077 978 9223**

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-777)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## ஆங்கிலம் கற்பிக்கப்படும்

ஆண்டு 2 தொடக்கம் O/L, A/L, பல்கலைக்கழகம் கற்கும் மாணவர்களுக்கும் மற்றும் வேலை செய்பவர்களுக்குமான ஆங்கில வகுப்புகள்வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
(1451)

M.Rajan

தொடர்பு: **075 099 2984**

## தேவை

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியிலுள்ள எமது கட்டட.வேலைகளிற்கு உதவியாளர்கள் தேவை.

உதவியாளர் :- வெல்டிங் வேலை ஓரளவு தெரிந்தவர்கள்
உதவியாளர் :- மரவேலை ஓரளவு தெரிந்தவர்கள்
உதவியாளர் :- சமையல் வேலை ஓரளவு தெரிந்தவர்கள்
(1456)

**077 953 0496**
**077 945 0668**

## காணி விற்பனைக்கு

பளை தர்மக்கேணியில் 21 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

**1 ஏக்கர் - 12 இலட்சம்**

தரகர்கள் தொடர்புகொள்ளத் தேவையில்லை.
(1445)

தொடர்பு: **075 274 1117**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 100 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 2வது காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- உங்கள் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம் (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)


(1453)

தொடர்புகளுக்கு:- ஜெயம்
**077 814 7389, 077 986 5457**

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-777)

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241
(C-777)


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 - 11 - 1933 | 11 - 07 - 2024 |

(1452)

**பிரம்மஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் பரமேஸ்வர ஐயர்**
(ஓய்வு பெற்ற லிகிதர், பலாலி தகனாரோடை பிள்ளையார் கோவில் – ஆதீனகர்த்தா)

பலாலியைப் பிறப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினக்குருக்கள் பரமேஸ்வரஐயர் நேற்று (11.07.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தராம்பாள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் சுதாத்மிகா, சுபாகரசர்மா(கண்ணன்) ஆகியோரின் தந்தையும் சிவகுமார், ஜீவப்பிரியா ஆகியோரின் மாமனாரும் குகவாசினி, அட்சயன், சுபஸ்ரீ, சுபஹர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.07.2024) இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.41, கலட்டிலேன்,
கோண்டாவில் மேற்கு,கோண்டாவில்.
021 222 6446
076 707 7978
தகவல்: குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org